# ஒப்பியல் இலக்கிய நோக்கில் இரகுவமிசம்

**திரு.ச.பத்மநாபன்,**

B.A.(Hons) P.G.Dip.inEdu. M.PhilSanskrit

**தலைவர்**

**சம்ஸ்கிருத்தத்துறை, கலைப்பீடம்,**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(Padmanaban73@gmail.com)

## ஆய்வுச்சுருக்கம்

இரகுவமிசம் எனும் காப்பியம் சம்ஸ்கிருதமொழியில் முதலில் மகாகவிகாளிதாசனால் இயற்றப்பட்டது. இந்திய நாட்டில் எழுந்த இவ்விலக்கியம் இலக்கிய நயமிக்கது. சிறந்த உவமைகள் கையாளப்படுகின்றது. இவ்ரகுவமிசம் தமிழ் மொழியில் செய்யுளாக இலங்கையில் யாழ்ப்பாணத்து நல்லூரில் அரசகேசரி எனும் புலவரால் பாடப்பட்டது. இலங்கையில் தோன்றிய முதலாவது பெருங்காப்பியமும் இதுவாகும்.

காளிதாசரின் ரகுவமிசத்தின் மொழிபெயர்ப்பே அரசகேசரியின் ஆக்கம் என பல்வேறு அறிஞர்களின் கருத்து காணப்படுகின்றது. இக்கருத்தினை தெளிவுபடுத்தவே இவ்விரு ஆக்கங்களையும் ஒப்பீடு செய்து ஆய்வு செய்யும் ஓர் இலக்கிய விமர்சனமாக இவ்வாய்வு அமைகின்றது.

சம்ஸ்கிருத காப்பிய இலக்கணங்களின் பொருத்தப்பாடு எவ்வளவு தூரம் காளிதாசரால் பின்பற்றப்பட்டதோ அதேமரபு தமிழ்இலக்கிய வரன்முறைக்கு ஏற்ப அரசகேசரியினால் பின்பற்றப்படுவது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் இரு இலக்கியங்களும் தனித்துவமுடைய தன்மையன என்பதும் இருபுலவர்களினதும் புலமையின் வெளிப்பாடு என்பதும் தெளிவுபடுத்துகின்றது.

**திறவு சொற்கள் :- திறனாய்வு, காவ்யம், இலக்கியம், புலமை, மொழி, வடமொழி.**

## அறிமுகம்

இரகுவமிசம் எனும் வடமொழி, தென்மொழிக் காப்பியங்கள் இரண்டு ஒப்புநோக்கப்படுகின்றது. காளிதாசன், அரசகேசரி எனும் கவிஞர்களின் ஆக்கங்களுள் காளிதாசனது இரகுவமிசம் காலத்தால் முற்பட்டது. அரசகேசரியின் இரகுவமிசம் தமிழ்மொழிபெயர்ப்பு எனும் நிலைக்கொள்கை விமர்சகனிடத்தில் நிலவிவருகின்றது. இலக்கியம் எனும் நிலையில் முதலூலைத் தழுவிய மொழிபெயர்ப்பு எனும் கருத்து எத்தகையது என்பதனை முதனூலைத் தழுவிய மொழிபெயர்ப்பு எனும் கருத்து எத்தகையது என்பதனை மதிப்பீடு செய்வதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகின்றது.

## ஆய்வு முறையியல்

வடமொழியிலும், தென்மொழியிலும் விளங்கும் இரவமிசம் எனும் இலக்கியங்கள் இரண்டினையும் விபரண ஆய்வு மூலமும், பகுப்பாய்வு மூலமாகவும் ஆராய்வதற்கான இலக்கிய விபரண ஆய்வும், ஒப்பியல் ஆய்வுமூலமும் செய்வதாக இவ் ஆய்வு செய்வதாக முறையியல் அமைந்து விளங்குகின்றது.

## ஆய்வு மூலங்கள்

இவ்விலக்கிய விபரண ஆய்வுக்குரிய மூலங்களாக காளிதாசரின் ரகுவம்சம் வடமொழி மூலமும், அரசகேசரியின் இரவமிசம் தென்மொழி மூலமும் முதனிலை ஆய்வு நூல்களாகக் கொள்ளப்படுகின்றன.

இவ்வாய்வுக்குரிய ஏனைய நூல்கள், ஆய்வுகள். உரைநூல்கள், வரலாற்றுத்தகவல்கள், இரண்டாம் நிலை ஆய்வு மூலங்களாக கொள்ளப்படுகின்றன.

## காளிதாசரின் ரகுவம்சம்

சம்ஸ்கிருத இலக்கிய உலகில் மாபெரும் கவிஞர்களுள் காளிதாசரும் ஒருவர் ஆவார். மஹாகவி காளிதாசன் உவமை அணியினை இலவசமாகக் கையாளுவதில் தனிமுத்திரை பதித்தவர். இவர் ரகுவம்சம், குமாரவம்சம் எனும் இருமஹாகாவியங்களையும், மேகதூதம், ருதுசம்ஹாரம் எனும் இருகண்ட காவியங்களையும், அபிக்ஞானசாகுந்தலம், விக்ரமோர்வசீயம், மாளவிகாக்னிமித்ரம் எனும் மூன்று நாடகங்களையும் இயற்றியவர். உலநாடுகள் அனைத்திலும் நன்கு அறியப்பட்ட இவர் சிருங்காரரசத்தை பிரதானமான ரசமாகவும் ஏனைய ரசங்களைத் தேவைக்கு ஏற்ப உரிய இடங்களில் இடம்பெறும் தன்மையிலும் தனது இலக்கியங்களை படைத்துள்ளார். விக்ரமாதித்திய மன்னரது ஆட்சிக்காலமான கி.பி.6ம் நூற்றாண்டில் வாழ்ந்த மஹாகாளிதாசனின் புகழ் உலகநாடுகள் எங்கும் சிறப்பாக தென்னாசியாவில் சம்ஸ்கிருத மொழியே தொடர்பாடல் மொழியாக விளங்கியதன் சிறப்பால் நன்கு அறியப்பட்ட தொடர்பாடல் மொழியாக விளங்கியதன் சிறப்பால் நன்கு அறியப்பட்டதாக விளங்கியது. மேற்குலக நாடுகளிலும் நன்கு அறிமுகப்படுத்தப்பட்ட தன்மையால் பரவியது. அபிஞான சாகுந்தலம் உலகறிந்த நாடகமாக திகழ்ந்தது.இத்தகைய சிறப்பினூடாக இந்தியப் பண்பாட்டின் உயர்வும், மேன்மையும், வாழ்வியல் ரசனையும் படம்படித்துக்காட்டத்தக்க அம்சமாக அமைகின்றது. அவ்வகையில் மஹாகவி காளிதாசரால் இயற்றப்பட்ட மஹாகவியங்களுள் ஒன்றே ‘ரகுவம்சம்’ ஆகும். ரகுவம்சம் எனும் மஹாகாவியம் பத்தொன்பது சர்க்கங்களையும் 1569 சுலோகங்களையும் உள்ளடக்கியது. இம்மகாகாவியத்திற்கு உரைவகுத்தவர்களுள் மல்லிநாதர் ஒருவராவார். இவரது உரையின் மேன்மையால் இம்மஹாகாவியத்தின் இலக்கியச் சிறப்பு திறனாய்வாளர் மத்தியில் மேலும் ஓர் அழியாமுத்திரை பதித்ததாக அமைகின்றது. ரகுவம்சம் மஹாகாவியம் ஆகும். இம்மஹாகாவியம் ரகுகுல வம்சத்தின் இருபத்தொன்பது (29) அரசர்களின் வரலாற்றைக் கூறும் நூலாகும். இவ்வகையில் 1 - 8 சர்க்கங்கள் திலீபன், ரகு, அஜன், ஆகியோரின் வரலாற்றைக் கூறுகின்றது. 9 - 15 தசரதர், ராமர் பற்றிக் கூறுகின்றது. 16, குகனது வரலாற்றையும் 17, ராமனது பேரனான அதிதியின் வரலாற்றையும், 18 சருக்கமான முறையில் ரகுகுலத்து இருபத்தொரு (21)அரசர்களின் வரலாறுகளையம், 19 அக்னிவர்மனின் காமம் பற்றியும் கூறுகின்றது. வான்மீகி இராமாயணத்தின் மூலத்தை அடிப்படையாகக் கொண்ட

இம்மஹாகாவியத்தின் 18ம் சர்க்கத்திற்கு விஷ்ணுபுராணமும், வாயுபுராணமும் மூலநூல்களாக அமைகின்றன.

பல்வேறு வகையான யாப்புக்களையும், உவமையணியைப் பிரதானமாகவும் ஏனைய அணிகளையும் உள்ளடக்க எழுந்த சிறப்பும் வைதர்ப நடையினைக் கொண்டதாகவும் தர்மம், அதர்மம், காமம், மோஷம் எனும் புருடார்த்தங்கள் எனும் புருடார்த்தங்களை அளிப்பதாகவும் விளங்கும் சிறப்பு தனித்துவமானதாக இவ் ரகுவம்ச மஹாகாவியத்தின் மேன்மைக்கு காரணமாயின. அத்துடன் சம்ஸ்கிருத திறனாய்வு முறைமையில் காவ்ய லஷணத்திற்குரிய உதாரணப்படுத்தத்தக்க நூலாகவும் விளங்குகின்றது.

**அரசகேசரியின் ரகுவம்சம்**

ஈழத்தமிழ் இலக்கிய மரபில் யாழ்ப்பாணத்து நல்லூர் ராஜதானிக் காலத்தில் தமிழ்மொழியிலும், சம்ஸ்கிருதமொழியிலும் புலமையுள்ள அரசகேசரி எனும் கவிஞரும் ஒருவர் ஆவார். இவர் நல்லூரை ராஜதானியாகக் கொண்டு ஆட்சி செய்த பராராசேகர மகாராசாவின் (1478 - 1519) மருமகன் ஆவார். இவர் நாயன்மார்கட்டிலுள்ள தாமரைக்குளத்தின் அருகேயுள்ள ஓர் மேன்மடத்திலிருந்து இயற்றிய காவியமே இரகுவமிசம் ஆகும்.

மதுரையியிருந்து யாழ்ப்பாணம் வந்து அரசாண்டசிங்கை ஆரியச்சக்கரவர்த்தியின் பதினோராம் சந்ததியிற் தோன்றியவரே கனகசூரியச்சக்கரவர்த்தி ஆவார். இவரது புதல்வர்களே பரராஜசேகரன், செகராசசேகரன் ஆகிய இவர் ஆவார். இவர் திருநெல்வேலியில் வசித்த பாண்டி மழவன் மரபிற்பிறந்தவரும் பரராஜசேகரனின் இரண்டாம் மனைவி வள்ளியம்மையின் மகளை விவாகம் செய்தவர். பராஜசேகரனது கட்டளைப்படி மகாகவி காளிதாசரின் இரகுவம்சத்தின் மொழிபெயர்ப்பாக முதனூற் பெயரைக் கொண்டு காவியமாக இயற்றப்பட்டதே அரசகேசரியின் இரகுவம்சம் ஆகும். இவர் ஆழ்வார் திருநகரிலிருந்து அட்டாவதானம் இராமானுஜசக் கவிராயரிடம் கல்வி பயின்றவர் ஆவார்.

அரசகேசரி பாயிரத்தில்,

வன்றிசைக் காளிதாசன் வடமொழி
தென்றிசைத் தமிழானளி செப்புகே
னன்றிசைக்குமுரைவழி நன்னெடுங்
குன்றிசைப்பது போலுங் குறிப்பரே. (08)

இன்னா காதையியற்ற விரும்பொருட்
டுன்னு செஞ்சொற்று கடபுதூயநூல்
பன்னுசெஞ்சொற்பரராச சேகர
மன்னனின்ப மனங்கொள வாய்ந்தரே. (09)

என வடமொழி மூலத்தினையும் அதன் வழிநூலாக உரைக்கும் காப்பியமாக பரராசசேகர மன்னனின் இலக்கிய இன்பமூட்டும் நூலாக ஆக்கப்பட்டமையை நூலாசிரியர் சுட்டுகின்றார்.

இவ் இரகுவமிசம் உயரிய நடையுடைய தமிழில் உயரிய சொன்னடையுடன் பாவடிவில் இருபத்தாறு (26) படலங்களையும், 2444 செய்யுட்களையுமுடையதாக தன்னகத்தே கொண்ட பெருங்காப்பியம் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசகேசரி தமிழ்க் காப்பிய இலக்கணங்கள் விளங்கத்தக்க சிறப்படையதாக பெருங்காப்பிய இலக்கணங்களை விதியாகவும் காளிதாசனின் ரகுவசம்சத்தை முதலூலாகவும் கொண்டு இந்நூலை இயற்றியுள்ளார். இவ் வகையில் இந்நூல் அமையுமாற்றை நோக்குகையில்,

இரகுவம்சம் காப்புச் செய்யுள் (1), பாயிரம் (09) என்பவற்றைக் கொண்டு மூன்றுபிரிவுகளையுடைய பெருங்காப்பியமாக அமைகின்றது. அவற்றுள் பொதுக்காண்டம், சிறப்புக் காண்டம், பொதுச் சிறப்புக்காண்டம் எனும் மூன்று பிரிவுகள் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு பெரும்பிரிவும் காண்டங்கள் என்றும், உட்பிரிவு படலம் என்றும் பகுக்கப்பட்டுள்ளன. இதன் வழி பொதுக்காண்டத்தில் 1 - 16 வரையான படலங்களான 1. ஆற்றுப்படலம். 2. நாட்டுப்படலம், 3. நகரப் படலம், 4. அரசியற்படலம், 5. குறைகூறு படலம், 6. தேனுவந்தனப் படலம், 7. ரகுவுற்பத்திப் படலம், 8. யாகப் படலம், 9. திக்குவிஜயப்படலம், 10. அயனுதயப் படலம், 11. அயனெழுச்சிப் படலம், 12. மாலையீட்டுப் படலம், 13. கடிமணப் படலம், 14. மீட்சிப்படலம், 15. இரகுகதியுறு படலம், 16. இந்துமதி பிறப்பு நீங்கு படலம் என்பன இடம்பெறுகின்றன. சிறப்புக் காண்டத்தில் 17 - 22 வரையாக ஆறு (06) படலங்கள் இடம்பெறுகின்றன. அவை முறையே 17. தசரதன் சாபமேற்ற படலம், 18. திருவவதாரப் படலம், 19. சீதைவனம் புகுபடலம், 20. இராவணன் வதைபடலம் , 21. சம்புகன் வதைப்படலம், 22. அவதார நீங்குபடலம் என்பன இடம்பெறுகின்றன. பொதுச் சிறப்புக் காண்டத்தில் 23 - 26 வரையாக நான்கு (04) படலங்கள் இடம்பெறுகின்றன. அவை முறையே, 23. குகன் அயோந்திசெல்படலம், 24. வாகுவலயப்படலம், 25. முடிசூட்டுபடலம், 26. குலமுறைப்படலம் என்பன இடம்பெறுகின்றன.

இந்நூலை முதலில் பதிப்பித்தவர் நல்லூர் வித்துவசிரோமணி ச.பொன்னம்பலப்பிள்ளை ஆவார். அவர் தமது பரிசோதனைக் குறிப்பின்படி (1887),

‘பராசசேகரமகாராசாவின் அனுமதிப்படி, அவர் மருமகராகிய அரசகேசரி என்பவர், காளிதாசன் கவிசிரேட்டர் வடமொழியில் இயற்றிய அரிய காவியமாகிய இரகுவமிசத்தைத் தமிழில் மொழிபெயர்த்து, இரவமிசம் என அம்முதனூற் பெயரையே தந்து சிறந்த காவியமாகப் பாடினார். சரித்திரமேயன்றி வருணைனைகளும் வடமொழி இரகுவமிசத்தோடு மாறுபடாவண்ணம் இதனைப்படிய நூலாசிரியருடைய வடமொழி தென்மொழிக் கல்வித்திறமையைக் குறித்து இவரைப் புகழ்ந்து பாராட்டாதார் யாவர். இந்நூலாசிரியராகிய அரசகேசரி என்பவர் இதனைச் சோழராசாக்களுடைய ராசதானிகளில் ஒன்றாகிய திருவாரூரிலே அரங்கேற்றினார். இந்நூலில் குலமுறைப்படலத்துக்குப் பின்னுள்ள சரித்திரங்களும் அக்காலத்தில் இவரால் மொழிபெயர்த்து பாடப்பட்டது என்பது கர்ண பரம்பரியம். “நல்லோரறிவெனும் வாய்மை தன்னுணிலைப் படாவிவன்றன் வெய்ய நீர்மையை நிகழ்த்துகின்றாம்” என்னும் குலமுறைப்படலத்தினுறுதிச் செய்யுளானும் அஃதுண்டென்பது துணியப்படும். அகப்பட்ட பிரதிகளானுங் காணப்படாமையாற் பிற்காலத்திற்கு சிதைந்தனபோலும் எனக் குறிப்பிடுகின்றார்.

இக்குறிப்பின்படி வடமொழியின் காவிய இலக்கியம் புலமைசார் அரசகேசரியால் தென்மொழிக் காவியமாக மொழிபெயர்க்கப்பட்டது என்பதேயாகும். இச்சிந்தனையை ஒப்புநோக்கி ஓர் முடிவினை வெளிப்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கம் ஆகும்.

## ஒப்பியல் இலக்கிய நோக்கு

ஒப்பியல் இலக்கியநோக்கு என்பது மிகப்பரந்த தன்மையது. இலக்கியங்களின் மொழி, சொல்நடை, இலக்கணம், யாப்பு, அணி, அலங்காரம் எனப் பல்வேறு தன்மைகளில் அதன் செல்வாக்கு ஒப்புநோக்கத் தக்கது. இந்நிலையில் காவியம் எனும் நிலையில் வடமொழியிலும், தென்மொழியிலும் காணப்படும் நூலாக இரகுவமிசம் விளங்குகின்றது. இந்நிலையில் வடமொழியில் தோன்றிய இரகுவமிசமமே முதல்நூல் ஆகும். இம் முதநூலுடன் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட அரசகேசரியின் படைப்பை ஒப்பு நோக்குதலே இவ்வாய்வாக அமைகின்றது.

இரு நூல்களும் பெயரளவில் ஒன்றாகவே விளங்குகின்றது. மொழி மரபில் முதனூல் வடமொழியிலும், இரண்டாம் நூல் தமிழ்மொழியிலும் இடம்பெறுகின்றது. மூல நூலினையே மொழிபெயர்ப்பாக வெளியிடும் மரபில் 20நூற்றாண்டின் ஜமதக்னியின் ‘இரகுவம்சம்’ மொழிபெயர்ப்பு நூல் குறிப்பிடத்தக்கது. மூலநூலை விளங்கிக் கொள்வதற்கு வடமொழி மூலம் உரைகள் பல காணப்படுகின்றன. அவற்றுள் மல்லிநாதசூரி என்பவரது ஜீவது எனும் உரை திறனாய்வு சார்ந்த உரையாக அமைகின்றது. தமிழ் மொழியில் புன்னாலைக்கட்டுவன் சி.கணேசஜயரின் பதவுரை காணப்படுகின்றது.

முதனூல் எனும் தன்மையில் காளிதாசர் உவமை அணியினையே பெரிதும் கையாண்டுள்ளார். அரசகேசரி தமக்கு இயைந்தவாறு அலங்காரங்களைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரசகேசரி காளிதாசருக்கு பிற்பட்டவர் எனும் காரணத்தாலும் கவிச்சக்கரவர்த்தி கம்பனது இராமாயணத்தினைப் பின்பற்றிய மரபு தனித்துவமானது, அரசகேசரியின் தமிழ் நடையில் தமிழ் இலக்கிய மரபில் சிலப்பதிகாரம், அகநானூறு பொன்ற இலக்கியங்களின் தாக்கம் அரசகேசரியின் இரகுவம்சத்தில் காணப்படுகின்றமை மனம் கொள்ளத்தக்கது. இவற்றை உதாரணங்கள் மூலமாக விளங்கிக் கொள்ளலாம். உதாரணமாக காளிதாசரின் ரகுவம்சத்தின் நான்காம் சர்க்கம், அரசகேசரியின் திக்குவிசய படலம் எனும் பத்தாம் (10) படலத்தில் உதாரணமாக நோக்குகையில்,

स राज्यं गुरुणा दत्तं प्रतिपद्याधिकं बभौ ।
दिनान्ते निहितं तेजः सवित्रेव हुताशनः ॥ १ ॥

**सः** - ரகு, **गुरुणा** - தந்தையினால், **दत्तम्** - கொடுக்கப் பட்ட, **राज्यं** - அரசை, **प्रतिपद्य** - பெற்று, **दिनान्ते** - பகலின் முடிவில், (ஸாயங்காலத்தில்), **सवित्रा** - ஸூரியனால், **निहितं** - தன்னிடம், வைக்கப்பட்ட, **तेजः**-ஒளியை, (**प्रतिपद्य**)- அடைந்து, **हुताशनः इव** - அக்னி ஒளிருவதுபோல், **अधिकं** - மிகவும், **बभौ** - விளங்கினான்.

(க-து) யுவராஜனாக இருக்கையிலேயே விளங்கிய ரகு, தந்தை தந்த அரசைப்பெற்று மிக விளங்கினான். சூரியனுடைய ஒளி ஸாயங்காலத்தில் அக்கினியில் பிரவேசிப்பதாக வேதம் கூறும். அக்கினி ஸூரிய ஒளியைப் பெற்று விளங்குவதுபோலத் தந்தையின் அரசு பெற்று ரகு மிக விளங்கினான்.

(காளிதாசரின் ரகுவம்சம், 4.1),

கனைகழல்வீரனுங்காவலான்றரு
புனைமணிமுடியொடும் பொலிந்து தோன்றினான்
தினகரன்றிவாந்தகாலத்திற் சேர்த்திய
இனவொளியொடு கனவிலங்கிற்றென்னவே.

(அரசகேசரியின் இரகுவம்சம், 10.1),

दिलीपानन्तरं राज्ये तं निशम्य प्रतिष्ठितम् ।
पूर्वं प्रधूमितो राज्ञां हृदयेऽग्निरिवोत्थितः ॥ २ ॥

**दिलीपानन्तरं** - திலீபனுக்குப் பிறகு, **राज्ये**-ராஜ்யத்தில், **प्रतिष्ठितं** - நிலைபெற்றுள்ள, **तं** - ரகுவைப்பற்றி, **निशम्य** - கேள்வியுற்று, **पूर्वं** - முன்பே, **राज्ञां** - அரசர்களின், **हृदये** - மனத்தில், **प्रधूमितः** - புகைந்த, **अग्निः** - (வருத்தமாகிய) அக்னி, **उत्थितः इव** - ஜ்வாலையுடன் எழுந்தது போலாயிற்று.

(க-து.) ரகு, யுவராஜனாக இருக்கும் பொழுதே பல அரசர்டி களையும் வென்று தனது பலத்தை அவர்கள் உணரும்படி செய்தி தான்; அதனால் சிற்றரசர்கள் மனத்தில் பொறாமைப் புகைந்து கொண்டிருந்தது. ரகு அரசனாக வந்ததும் அப் பொறாமைத் தீ கொழுந்து விட்டெரியத் தொடங்கியது. மன்னர்கள், ரகுவிற்கு அடங்கியிருக்க வேண்டிய நிலையை எண்ணி மிக வருத்தமடைந்த னர் என்பது கருத்து.

(fhspjhrupd; uFtk;rk;> 4.2)>

நிமிர்தருமிசையின்றன்னை நேர்ந்துமுன்
இமிர்தருபுகைகனலென்று நோக்கிய
அமரிடுமதிபலவரசர் பின்னர்தந்
தமரொடுமடுஞ்சிகைத்தழலினோக்கினார்.

(அரசகேசரியின் இரகுவம்சம், 10.2),

छायामण्डललक्ष्येण तमदृश्या किल स्वयम् ।

पद्मा पद्मातपत्रेण भेजे साम्राज्यदीक्षितम् ॥ ५ ॥

**पद्मा** - லக்ஷ்மி, **स्वयं** - தான், **अदृश्या** - பார்க்கப்படாதவளாய் இருந்து கொண்டு, **छायामण्डल लक्ष्येण** - ஒளி வட்டத்தினால் ஊஹிக்கத் தகுந்த, **पद्मातपत्रेण** - தாமரைப் புஷ்பமாகிய குடையின்மூலம், **साम्राज्यदीक्षितम्** - சக்ரவர்த்திப் பதவியில் அபிஷேகம் செய்யப்பட்டுள்ள, **तम्** - ரகுவை, **भेजे किल** - உபசரித்தாள் போலும்!

(க-து) ரகு, சக்ரவர்த்திகளுக்குரிய கம்பீரமான தேஜஸுடன் இருந்தான். இவ்வாறு மிக ஒளியுடன் ரகு தோன்றியதற்குக் கவி ஒரு காரணத்தை உத்ப்ரேக்ஷித்துக் கூறுகிறார். 'லக்ஷ்மி தேவியே கண்களுக்குப் புலப்படாது நின்று, தாமரைப் புஷ்பமாகிய குடையைத் தாங்கி அவனுக்கு ராஜோபசாரம் செய்தாள் போலும்'. லக்ஷ்மியின் குடையும் கண்களுக்குப் புலப்படவில்லை. ரகுவைச் சுற்றிலுமுள்ள ஒளிவட்டத்தினால் (நிழலினால்) தாமரைக்குடை பிடிக்கப்பட்டுள்ளதென்பதும் ஊஹிக்க வேண்டியதாயிற்று. நிழலைக் கொண்டு உருவத்தை ஊஹிப்பதுபோல் வட்டமான ஒளியைக் கொண்டு குடையுள்ளது அறியப்பட்டது. இவ்வாறு லக்ஷ்மியும் உபசரிக்கும்படியான பெருமை பெற்றிருந்தான் ரகு.

(காளிதாசரின் ரகுவம்சம், 4.5),

இச்சையாங்கட்புலப்படாளென்றெண்ணினும்
நிச்சமாமன்னவனிறைந்தேசெனுங்
கைச்சரோகத்திடை விளங்குக்கஞ்சமென்
பிச்சமேகொடு திருப்பெரிது பேணினாள்.

(அரசகேசரியின் இரகுவம்சம், 10.3),

परिकल्पितसांनिध्या काले काले च वन्दिषु ।

स्तुत्यं स्तुतिभिरर्थ्याभिरुपतस्थे सरस्वती ॥ ६ ॥

**सरस्वती च** - ஸரஸ்வதியும், **काले काले** - அவ்வக் காலங்களில், **वन्दिषु** - புகழ் கூறுபவர்களிடம், **परिकल्पित सान्निध्या-(सती)** - செய்யப்பட்ட தோற்றமுடையவளாய் இருந்து கொண்டு, **स्तुत्यं** - புகழத்தக்க ரகுவை, **अर्थ्याभिः** - பொருளோடுகூடிய (உண்மையான), **स्तुतिभिः** - புகழுரைகளால், **उपतस्थे** - தொழுதாள்.

(க-து) முன் சுலோகத்தில் லக்ஷ்மி ரகுவிற்குத் தொண்டு செய்தவகை கூறப்பட்டது. இச்சுலோகத்தில் ஸரஸ்வதி, எவ்வாறு ரகுவிற்குப் பணிவிடை செய்தாள் என்பது சொல்லப்படுகிறது.

(காளிதாசரின் ரகுவம்சம், 4.6)

குருதிநாறொளிறுவேன் மன்னன் கொற்றமே
கருதி நாவலர் தநாவுறைந்துகாமரு

பரிதிநாண்மலர்ப்பொகுட்டுறையும் பார்தரு
சுருதிநாயகன் மறிறுதிப்பதாயினாள்.

(அரசகேசரியின் இரகுவம்சம், 10.4),

मनुप्रभृतिभिर्मान्यैर्भुक्ता यद्यपि राजभिः।
तथाप्यनन्यपूर्वेव तस्मिन्नासीद्वसुन्धरा ॥ ७ ॥

**वसुन्धरा** - இப்பூமி, **मनुप्रभृतिभिः** - மனுமுதலான, **मान्यैः** - மரியாதைக்குரிய (சிறந்த), **राजभिः** - அரசர்களால், **भुक्ता यदि अपि** - அனுபவிக்கப்பட்டாள் என்பது உண்மையே; **तथापि** - அவ்வாறிருந்தும், **तस्मिन्** - அவ்வரசனிடத்தில், **अनन्यपूर्वा इव** - மற்ற ...ர்களால் அனுபவிக்கப்படாதவள் போலவே (புத்தம் புதியவளாகவே), **आसीत्** - இருந்தாள்.

(க-து) பூமியை அரசரது மனைவியாகக் கூறுவது கவி மரபு. மனு முதலிய அரசர்களுக்கும் உரியதாக இருந்த பூமி இப்பொழுது ரகுவிற்கு உரியதாயிற்று ஆயினும் பூமி, புதுமை குன்றாது இளமையுடன் ரகுவினிடம் அன்பு கொண்டது.

(காளிதாசரின் ரகுவம்சம், 10.7),

ஒறாமனுமுதலியமன்னரொண்புய
மறாதடைந்திடினுமொர் காலுமன்றலைப்
பெறாளெனப்புதுமணம் பெற்ற பெற்றியின்
ஈறாமலர்ப்புயம்புவிமங்கை நண்ணினாள்.

(அரசகேசரியின் இரகுவம்சம், 10.5),

स सेनां महतीं कर्षन् पूर्वसागरगामिनीम् ।
बभौ हरजटाभ्रष्टां गङ्गामिव भगीरथः ॥ ३२ ॥

**पूर्वसागरगामिनीं** - கிழக்கு ஸமுத்திரத்தை நோக்கிச் செல்லுகின்ற, **महतीं** - மிகப்பெரிய, **सेनां** - ஸேனையை, **कर्षन्** - இழுத்துச் செல்லுகின்ற, **सः** - அவன், **हरजटाभ्रष्टां** - சிவபிரானது சடையினின்று நழுவியதும், **पूर्वसागरगामिनीं** கீழ்க் கடலை நோக்கிச் செல்வதும், **महतीं** - பெரியதுமான, **गंगां** - கங்கா நதியை, **कर्षन्** - அழைத்துக்கொண்டு சென்ற, **भगीरथः इव** - பகீரதன் போல், **बभौ** விளங்கினான்.

(க-து) ரகுவினது சேனை, கங்கையின் பிரவாகம்போல் பரந்து இருந்தது. கங்கா நதிபோல் சேனையும் கிழக்கு நோக்கிச் சென்றது. அப்பெரிய சேனையைக் கொண்டுசென்ற ரகு, கங்கையைக் கொண்டு சென்று பகீரதனுக்கு ஒப்ப விளங்கினான்.

(காளிதாசரின் ரகுவம்சம், 4.32),

விறன்மிகும்படை தொடர்ந்திடக் கீட்டிசைவேலை
திறனினோக்குபு சென்றிடுந்திங்கள் வெண்குடையோன்
பெறலருந்தவப் பெற்றியின் வரநதிபின்னர்
உறநடந்திடும் பகீரத்ன் றன்னையுமொத்தான்.

(அரசகேசரியின் இரகுவம்சம், 10.56)

आपादपद्मप्रणताः कलमा इव ते रघुम् ।
फलैः संवर्धयामासुरुत्खातप्रतिरोपिताः ॥ ३७ ॥

**आपाद-पद्म प्रणता:**- தாமரைபோன்ற (அவனது) பாதங்கள் வரை வணங்கியவர்களும், **उत्खात प्रतिरोपिता:**- (ராஜ்யத்திலிருந்து) வீழ்த்தி (மறுபடியும் அரச பதவில்) ஸ்தாபிக்கப்பட்டவர்களுமான, **ते** - அவ்வங்க மன்னர்கள் ;—**उत्खात-**

(காளிதாசரின் ரகுவம்சம், 4.37),

வீறுபட்டுடையதானை வேந்தனால்வீயாவீயும்
ஊறுபட்டுடைந்து மீளவுய்ந்துளமன்னரெல்லாம்
சேறுபட்டைம்பூகல்குஞ்செய்யிடைப்பறித்துமீள
நாறுபட்டபைங்கூழினன்பலநல்கினாரே.

(அரசகேசரியின் இரகுவம்சம், 10.68)

स प्रतापं महेन्द्रस्य मूर्ध्नि तीक्ष्णं न्यवेशयत् ।
अङ्कुशं द्विरदस्येव यन्ता गम्भीरवेदिनः ॥ ३९ ॥

**यन्ता** - யானைப்பாகன், **गम्भीरवेदिन:** - கம்பீரவேதி என்றவகையைச் சேர்ந்த, **द्विरदस्य** - யானையின், **मूर्ध्नि** - தலையில், **तीक्ष्णम्** - கூரான, **अङ्कुशं इव** - அங்குசத்தை (செலுத்துவது) போல, **स:**- அந்த ரகு, **महेन्द्रस्य** - மஹேந்திர மலையின், **मूर्ध्नि** - சிகரத்தில், **तीक्ष्णम्** - பொறுக்க இயலாத, **प्रतापम्** - தனது பாராக்ரமத்தை, **न्यवेशयत्** - நிலைநாட்டினான்.

(க-து) தோலைக் கிழித்தாலும், ரத்தம் பெருகச் செய்தாலும், சதையை அறுத்தாலும் தன்னைப்பற்றிய உணர்வில்லாது மதம் கொண்டுள்ள யானைக்குக் கம்பீரவேதி எனப் பெயர்.

(காளிதாசரின் ரகுவம்சம், 4.39),

அத்தலையரசர்கோமான தோரண நடக்குவான்செங்
கைத்தலத்தெடுத்தவன் வாயங்குசங்கந்சீறும்
பித்திவர்மத்தமாவின் மத்தகம் பிறங்கிற்றென்ன
வைத்தனன் விசயச்சின்னமயேந்திரத்துச்சிமாதோ.

(அரசகேசரியின் இரகுவம்சம், 10.71),

सससञ्जुरश्वक्षुण्णानामेलानामुत्पतिष्णवः ।
तुल्यगन्धिषु मत्तेभकटेषु फलरेणवः ॥ ४७ ॥

**अश्वक्षुण्णानाम्** - குதிரைகளால் நசுக்கப்பட்ட, **एलानां** - ஏலச் செடிகளின், **फलरेणवः** - (காய்ந்த) காய்களின் தூள்கள், **उत्पतिष्णवः** - மேலே கிளம்புகின்றனவாக, **तुल्यगन्धिषु** - ஒத்த மணமுள்ள, **मत्तेभ कटेषु** - மதங்கொண்ட யானைகளின் கன்னங்களில், **सससञ्जुः** - படிந்தன.

(க-து) அக்காடுகளில், குதிரைக் குளம்புகளால் நசுக்கப்பட்ட ஏலச்செடிகளின் காய்களுடைய தூள், மதஜலம் பெருகுவதால் ஈரமுள்ள யானைகளின் கன்னங்களில் ஒட்டிக்கொண்டது. ஏலக்காய்களின் வாசனை, யானையின் மதஜல வாசனையை ஒத்திருந்தது.

(fhspjhrupd; uFtk;rk;> 4.47)>

மிடறொகாவுயர் பரிவெள்ளத்தின்குரம்
இடறவேலஞ்சிதைந்தெழுந்தநுண்பொடி
அடறவாமதமணமடங்கவானையின்
கொடிறுவார்கரடமதடைத்தல்கூடுமே.

(அரசகேசரியின் இரகுவம்சம், 10.120)

मुरलामारुतोद्धूतमगमत्कैतकं रजः ।
तद्योधवारबाणानामयत्नपटवासताम् ॥ ५५ ॥

**मुरलामारुतोद्धूतम्** - முரளா என்ற நதியின் காற்றினால் தூவப்பட்ட, **कैतकं रजः** - தாழம்பூவின் மகரந்தப் பொடி, **तद्योधवारबाणानां** - ரகுவினுடைய வீரர்களின் சட்டைகளுக்கு, **अयत्नपटवासताम्** - முயற்சியின்றி (தானாகக்) கிடைத்த வாஸனைப் பொடியின் தன்மையை, **अगमत** - அடைந்தது.

(க-து) கேரள நாட்டிலுள்ள முரளா நதியின் காற்று தூவிய தாழம்பூவின் மகரந்தப் பொடிகள், ரகுவின் சேனை வீரர்களின் உடைகளில் படிந்து அவைகளுக்கு வாசனையளித்தன. அப்பொடிகள் முயன்று பெறப்பட்டன அல்ல; முயற்சியின்றித் தாமாகக் கிடைத்தன.

(காளிதாசரின் ரகுவம்சம், 10.55),

ஆங்கொளிச்சரளத்திற் பிணித்தவானையின்
பூங்கதிர்ச் சங்கிலியதனிற்போகிய
ஓங்கெரிமாத்தடஞ்சுடர்களோவற

வீங்கிருளிரவிற்கேவிளக்கமாகுமே.

(அரசகேசரியின் இரகுவம்சம், 10.257),

शैरुत्सवसंकेतान् स कृत्वा विरतोत्सवान् ।
जयोदाहरणं बाह्वोर्गापयामास किन्नरान् ॥ ७८ ॥

**सः** - அவன், **उत्सव संकेतान्** - உத்ஸவர், ஸங்கேதர் என்ற கூட்டங்களை, **विरतोत्सवान्** - களிப்பற்றவர்களாக, **कृत्वा**-செய்தபின், **बाह्वोः**-தனது தோள்களின், **जयोदाहरणम्**-வெற்றியைக் கூறும் பாடலை, **किन्नरान्** - கின்னரர்களைக் கொண்டு, **गापयामास** - பாடச் செய்தான்.

(க-து) ரகு, உத்ஸவர் ஸங்கேதர் என்ற கூட்டத்தினரை வென்றான். அவனது புகழைப் பாட்டில் அமைத்து, ஹிமாலயத்தில் வசித்த தேவஜாதியினரான கின்னரர்கள் பாடினர்.

(காளிதாசரின் ரகுவம்சம், 4.78)

அன்னவர்விழவையச் சமரினோடழித்து
உன்னிய விழவிலராக்கியொண்புகழ்
கின்னரர்பாடவுண்மகிழந்துகேட்டனன்
தனினகரிலாவடற்றானைவீரனே.

(அரசகேசரியின் இரகுவம்சம், 10.261)

परस्परेण विज्ञातस्तेषूपायनपाणिषु ।
राज्ञा हिमवतः सारो राज्ञः सारो हिमाद्रिणा ॥ ७९ ॥

**तेषु** - அக்கூட்டத்தினர், **उपायनपाणिषु** - காணிக்கைகளை கையில் ஏந்தியவராய் இருந்தபொழுது, **राज्ञा**-அரசன் ரகுவினால், **हिमवतः** - ஹிமய பர்வதத்தின், **सारः** - செல்வமும், **हिमाद्रिणा** - ஹிமய மலையால், **राज्ञः** - ரகுவினுடைய, **सारः** - பராக்ரமமும், **परस्परम** - ஒருவர்க்கொருவரால், **विज्ञातः** - நன்கு அறியப்பட்டன.

(க-து) வெல்லப்பட்ட பர்வத வாஸிகள், ஹிமய மலையில் கிடைக்கும் சிறந்த பொருள் எல்லாவற்றையும் காணிக்கையாகக் கொண்டு வந்தனர். அவைகளைக் கண்டபின்பே ரகு, ஹிமாலயத்தின் செல்வம் முழுவதையும் அறிந்தான். மலையிலே வசித்த பலமுள்ள கூட்டத்தினரை வென்றதால் ரகுவின் பலத்தை ஹிமாலயமும் உணர்ந்தது.

(காளிதாசரின் ரகுவம்சம், 4.79),

சீற்றமிற்றன்னவர்திறை சொரிந்தனர்
சாற்றருமன்னற் குஞ்சயிலா நாதற்கும்
மாற்றரும் பெருந்தனவளர்வும் வெஞ்சமர்
ஆற்றலுந்தனித்தனியப்பட்டவே

(அரசகேசரியின் இரகுவம்சம், 10.262)

இவ்வாறாக நோக்குகையில் இரகுவம்சத்தின் மூலநூலின் இலக்கியச் செழுமை தமிழ்பாமரபில் அரசகேசரி மிக நிதானமாக உயர்புலமையூடாக மொழிபெயர்த்தமைக்கு தக்க உதாரணங்களாக இவை ஒப்புநோக்கத்தக்கன. மூலநூலின் இலக்கியச் சிறப்பை உரையாசிரியர் எடுத்துரைப்பார். அதனூடாகவே மூலநூலின் இலக்கியச் செறிவும், ஆழமும், பொருண்ணயமும் வெளிப்படுத்தப்படும். அதனைப் பொருட்டாகக் கொண்டே மூலநூலுடன் இணைத்து உரையும், உரைக்கு உரையெழுதும் மரபும், உரைக்கு பெயர் சூட்டும் மரபும் பெருமைஉடையதாக விளங்கியது.

தமிழ் இலக்கிய மரபில் வரன்முறை பாடமாகவும் இரகுவமிசத்தையும் கற்பித்தனர். இவ்வகையில் இருபாலைச் சேனாதிராய முதலியார் நல்லூர் சரவணமுத்துப்புலவர், சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் ஆகியோர் மாணவர்களுக்கு கற்பித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. சுன்னாகம் குமரசுவாமிப்புலவர் 'இரகுவமிசக் கருப்பொருள்' என சுக்கமாக பொருளையெழுதி வெளியிட்டுள்ளார்.

இலக்கிய ஒப்புமையில் மூல நூலைத்தழுவிய மொழிபெயர்ப்பு அரசசேகரியின் இலக்கிய நயத்துடன் கடினமான சொன்னடைச் செறிவுடன் காணப்படுகின்றமை அவதானிக்கத்தக்கது.

## நிறைவுரை

இதன்வழி காளிதாசரின் இரகுவம்சத்தின் மொழி பெயர்ப்பு பகுதிகளும் உள்ளடங்கலாக அரசகேசரி இரகுவம்சத்தினை இலக்கிய ரசனையுடன் கவிதைவமிடுக்குடனும் தனக்குரிய தனித்வைத்துடனும், சிலபகுதிகளை மொழிபெயர்த்தும் சில பகுதிகளை ஆக்கியும், விரித்ததும், தனது கற்பனை வளத்தினை நன்கு வளம்படுத்திய தன்மையில் ஆக்கியுள்ளார். இந்நிலையில் காளிதாசரது இரகுவம்சம் மூல நூலாகவும், வான்மீகி இராமாயணம், கம்பராமாயணம் மற்றும் சிலப்பதிகாரம், அகநானூறு போன்ற தமிழ் இலக்கிய வளம் சோர்க்கும் இலக்கிய நயங்களாகவும் திகழும் நிலையில் தனித்தமிக்க காப்பிய மரபின் அடையாளமாக முற்று முழுதான நேரடியான மொழிபெயர்ப்பு இலக்கியம் எனக் கூற இயலாத அளவிற்கு உயர்வுடனும் தனக்கேவுரிய தனித்துவத்துடனும் அரசகேசரியின் இரகுவம்சம் விளங்குகின்றது.

**உசாத்துணை நூல்கள்**

முதனிலை ஆய்வு மூலம் :-

**1. வடமொழி**

i. **காளிதாசரின் இரகுவமிசம்** (ே.னு) மல்லிநாதரின் உரையுடன், நிர்ணயசாகர பதிப்பு, பம்பாய்.

ii. **ரகுவம்சஹாகாவியம்,** (1952), வே.ஸ்ரீ.வெங்கடராகவாசாரியார் தமிழ் உரையடன், திலிட்டர் ப்ளவர் கம்பனி, சென்னை.

**2. தென்மொழி**

i. அரசகேசரி (1887) **இரகுவமிசம்,** நல்லூர் வித்துவ சிரோன்மணி ச.பொன்னம்பலப்பிள்ளை(பரி.) வித்தியாதுபாலயந்திரசாலை, யாழ்ப்பாணம்.

ii. அரசகேசரி (1932) **இரகுவமிசம்,** மூலமும், சி.கணேசையரின் பதவுரையும், சோதிடப் பிரகாச யந்திரசாலை, கொக்குவில்.

இரண்டாம் நிலை ஆய்வு மூலம்.

1. சதாசிவம்,ஆ., (1967), **ஈழத்தமிழ்க்கவிதைக் களஞ்சியம்** சுன்னாகம்.
2. கந்தையாபிள்ளை, ந.சி., (1952), **தமிழ்ப்புலவர் அகராதி,** ஆசிரியர் நூற்பதிப்புக்கழகம், சென்னை.
3. கணேசையர், சி., (1939), **ஈழநாட்டுத்தமிழ்ப்புலவர் சரிதம்**, சுன்னாகம்.
4. கந்தையாபிள்ளை, ச., (1914), ‘அரசகேசரி’, **செந்தமிழ்,** தொகுதி 12, பகுதி - 3. 1914 துயபெ - குநடிஇ சென்னை. பக். 81- 89.